RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1711

# இனவரைவியல் நோக்கில் சிறுபாணாற்றுப்படை

செ. நாகஜோதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா

# The Sirupanattruppadai from the Ethnographic Point of View

C. Nagajothi [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: nagajyothi@vvvcollege.org

Received: 14-04-2022
Revised: 23-10-2022
Accepted: 05-11-2022
Published: 17-12-2022

Check for updates

## ABSTRACT

Ethnography is an integral part of cultural anthropology. The aim is to know the life aspects of the people living as a particular race. Literature highlights the lives of the people. Ethnography is the study of literature that reveals various stages of human food, clothing, shelter, and culture. One of the Pathuppaattu literature that arose during the Sangam period is Sirupanattruppadai. This distinction enables us to understand the society and culture of the Panars. The Panar community was a community that transcended all five thinai lands. On this basis, it can be assumed that the Panar community may have lived as a nomadic community. Through this literature, one learns about the way of life of the Siru Panars (Who plays the small lute), their economic status, their musical knowledge, artistic skills, guidance, manner of teaching, living in gifts, etc., and the qualities of the Siru Panars who sing praises to the king and enjoy the hospitality of the people belonging to the thinai land in order to receive the prize. The hypothesis of this study is to seek to know the life of the Panars, whose data for ethnography is based on data from the Sirupanttruppadai, which is one of the books of the Aatruppadai.

**Keywords:** Ethnographic, Sirupanattruppadai, Cultural, Food, Clothing, Shelter.

## முன்னுரை

மானிட வாழ்க்கையை மானிடன் ஆவணப்படுத்தும் கலை வடிவம் இலக்கியம். எனவே இலக்கியத்தைக் காலம் காட்டும் கண்ணாடி என்றும் வர்ணனையின் பொக்கிஷம் என்றும் கூறலாம். “படைப்பாளி ஒருவன் சுயசிந்தனை என்ற எல்லைக்குள் நின்று மட்டும் ஓர் இலக்கியத்தை உருவாக்க முடியாது. அவனைச் சுற்றியுள்ள புறவுலகின் அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் உற்று நோக்கி, அவற்றின் தனிப்பட்ட இயல்புகளையும் இயக்கங்களையும் இணைத்து இலக்கியம் படைக்கிறான் என்று குறிப்பிட்டுள்ளார் (Sivasubramanian, 2005). இத்தகைய போக்கில் ஒரு புலவன் தன் செவிக்கு எட்டிய தகவல்களையும் தான் கண்ட நிகழ்வுகளையும் மையப்படுத்தி இலக்கியம் படைக்கிறான். அவ்வகையில் சிறுபாணாற்றுப்படை பாணர்களின் நிலையை அறியும் அற்புதமான இலக்கியம். இவ்விலக்கியத்தினை இனவரைவியல் நோக்கில் அறிய முற்படுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இனவரைவியல் விளக்கம்

இனவரைவியல் என்னும் சொல் ஆங்கிலத்தில் Ethnosஎன்கிறது. கிரேக்க மொழி graphein என்கிறது. Ethnos என்பதற்கு இனம், இனக்குழு, மக்கள் என்பது பொருள். Ethnos என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருளாகும். எனவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் பொருளில் `இனக்குழுவியல்' என்று சுட்டுவர்.`குறிப்பிட்ட மானிடச் சமுதாயம் ஒன்றினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி, விவரிப்பு இனவரைவியலாகும்' "இனக்குழுவியல் என்பதுபண்பாட்டு மானிடவியலின் அடித்தளமாக அமைவது (Sivasubramanian, 2005). இது ஓர் இனக்குழு அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விரிவான. முழுவதுமான அறிவினை எடுத்தியம்புகிறது. புழங்குடிச் சமூகம், கிராமச் சமூகம் முதலான சிறு சிறு சமூகங்களின் இடவியல்பு விளக்கம், மக்களின் உருவத்தோற்றம். வாழிட அமைப்பு, வாழ்க்கை முறை, பேசும் மொழி, சமூக அமைப்பு, பொருளாதாரம், சமயம், சட்ட முறைகள், தொழில்நுட்பம், கலை மற்றும் பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து அப்பண்புகளை முறைப்படுத்தி இனக்குழுவியல் விளக்கும் ஒவ்வொரு சமூகத்தின் அகப்புறப் பண்பாடுகளை அறிவியல் நோக்கில் இது ஆராயும்" மேலே குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் இனவரைவியல் என்பது குறிப்பிட்ட மனித சமூகத்தின் அல்லது இனத்தின் உணவு, உடை, இருப்பிடம், பழக்க வழக்கம் பண்பாடு ஆகியவற்றின் வாழ்வியற் கூறுகளை உற்று நோக்கக் கூடியதாகும். இதன்மூலம் குறிப்பிட்ட மக்கட் குழுவின் எல்லா வகையான மரபுகளையும்.அவ்வினத்தாரின் உணர்வோடு பதிவு செய்வது ஆகும் (Balusamy, 1992).

## இனவரைவியல் கூறுகள்

இனவரைவியல் கூறுகள் எந்தெந்த அடிப்படையில் ஆராயப்பட வேண்டும் என்பதற்கு பக்தவத்சல பாரதி கூறுவனவற்றை உற்று நோக்குவது அவசியமாகிறது. அவை, 1.புவிச்சூழல், 2. சுற்றுச்சூழல், 3.காலநிலை, 4.குடியிருப்பு நிலை, 5.பொருள்சார் பண்பாடு, 6.குடும்ப அமைப்பு, 7.திருமண முறை, 8.உறைவிட முறை, 9.வாழ்வியற் சடங்குகள், 10.குழந்தை வளர்ப்பு முறை,11.பண்பாட்டு வளமாக்கும் முறை, 12.மக்களின் உளவியல் பாங்குகள், 13.மணக்கொடை, 14. மணவிலக்கு முறை, 15.வாழ்க்கைப் பொருளாதாரம், 16.தொழிற்பகுப்பு, 17.உற்பத்தி முறை, 18.நுகர்வு முறை, 19.பங்கீட்டு முறை, 20.பரிமாற்ற முறை, 21.கைவினைத் தொழில்கள், 22.அரசியல் முறை, 23.அதிகார உறவுகள், 24.சமூகக் கட்டுப்பாடு, 25.மரபுசார் சடங்குகள், 26.சமய நம்பிக்கைகள், 27.சடங்குகள், 28. வழிபாட்டு முறைகள், 29.மந்திரம், 30.சூனியம், 31.விழாக்கள், 32.இசை, 33.விளையாட்டுகள், 34.அழகியற் சிந்தனைகள், 35.வழக்காறுகள், 36.ஈமச்சடங்குகள், 37.பிற தொடர்புடைய செய்திகள் என்னும் வகையில் இன வரைவியல் கூறுகள் அமையப் பெறும் என்று பக்தவத்சலம் கூறுகிறார். (பக்தவத்சலம் -118)

## சங்ககாலத்தில் இனவரைவியல் கூறுகள்

சங்க இலக்கியம் பண்பாட்டுக் கொள்கையின் சாரம். மானிடரின் வாழ்க்கை முறை வரலாற்றுப்பதிவு மிக்கது. "சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளையும் வரலாற்றையும் சங்க இலக்கியங்களைக் கொண்டே பேசி வருகின்றோம். நம்பிக்கைகள், பழக்கவழக்ங்கள், விழுமியங்கள், வாழ்க்கைமுறைகள், சடங்குகள். தொழில்கள், புழங்குப்பொருட்கள், மக்கள் குழுக்கள், உணவு, ஆடை, அணிகலன்கள், வழிபாடு, தெய்வங்கள், குழுத்தலைவர்கள், போர், விலங்குகள், பறவைகள், நிலை உயிர்கள், ஐம்பூதங்கள், போன்றவை குறித்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவையனைத்தும் இனவரைவியல் தரவுகள் ஆகும்." என்கிறார் (Stephen, 2004).

## சிறுபாணாற்றுப்படை விளக்கம்

சிறுபாணாற்றுப்படை 269 அடிகள் கொண்ட பாட்டு ஆகும். இசைத்தமிழைப் போற்றிய வளர்த்த பாணர்கள் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என அழைக்கப்பட்டனர். யாழ்ப்பாணர்கள்

சிறுபாணர், பெரும்பாணர் என இருவகைப்படுவர். சிறிய யாழை இசைத்துப் பாடுவோர் சிறுபாணர் என்றும் பெரிய யாழை இசைத்துப் பாடுவோர் பெரும்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீளும் சிறுபாணன் குடும்பம் தமக்கெதிரே வழியில் கண்ட பாணர் குடும்பத்தை ஆற்றுப்படுத்துவதாகப் புலவர் இடைக்கழி நாட்டு நத்தத்தனார் பாடியுள்ளார்.

## சிறுபாணாற்றுப்படையில் இனவரைவியல் பதிவுகள்

சிறுபாணர்கள் வறுமை தங்களைத் துன்புறுத்தும் என்பதை அறிந்து தம் இசை ஞானத்தையும், கூத்து அறிவையும் வெளிப்படுத்தி மன்னனைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறும் வாழ்வினர். இப்போக்கில் வாழ்ந்த பாணர்களின் வறுமை நிலை. பாணர்களின் கலை ஞானம், இசையறிவு, பாணர்களின் தோற்றம், நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ளும் நிலை, மன்னனைப் புகழ்ந்து பரிசில் பெறும் விதம் ஆகியவற்றைச் சிறுபாணாற்றுப்படையில் காண முடிகிறது.

## சிறுபாணர்களின் வறுமை நிலை

சிறுபாணர்கள் சிறிய யாழை இசைக்கும் கலைஞர்கள் இசையோடு ஆடற்கலையிலும் வல்லவர்கள். இத்தகையோர் பிறரை ஏமாற்றிப் பிழைக்கக் கருதாதவர்கள். ஐம்பொறிகளும் தளர்வதற்குக் காரணமான பசி வந்த சூழலிலும் பிறரிடம் இரந்து கேட்போர் அல்லர். கடுமையான பசியால் கிணைமகள் குப்பையில் வளர்ந்து கிடக்கும் குப்பைக்கீரையை நகத்தால் கிள்ளி சுவைக்குச் சேர்ப்பதற்கு உப்பும் இல்லாத வறுமையால் அதைப் பக்குவமாகச் சமைத்து, பிறர் காண்பதற்கு நாணி தலைவாயிற் கதவை அடைத்து அதைத் தம் சுற்றத்தாரோடு சேர்ந்து உண்ணும் பண்பினர். இவர்களின் இத்தகைய வறுமை நிலையினை,

"ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்

வளைககைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைந்த

குப்பை வேளை உப்பிலி வெந்ததை

மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து

இரும்பேர் ஒக்கலொ டொருங்குடன் மிசையும்"

என்கிறார் (Mohan, 2007). இவ்வினத்தர் யாழ் இசைத்தலைத் தவிர வேறு தொழிலை அறியார். எனவே பொருளீட்டவோ. பிற்கால வாழ்விற்குப் பொருளைச் சேர்த்து வைப்பதோ இவர்களுக்குப் பழக்கமில்லை. இவர்கள் மாட மாளிகையில் வாழ்வோர் அல்ல. இவர்களது சிறிய இருப்பிடத்தில் வறுமையின் காரணமாக நீண்ட நாள் சமைக்கப்படாமல் இருந்த அடுக்களையில் கண்விழிக்காத நாய்க்குட்டி தாய் மடியில் வாய் வைத்து பால் குடிக்க முற்படுகிறது. நீண்டநாள் பயன்படுத்தாத அடுக்களையில் நாய் தம் குட்டிகளோடு படுத்திருக்கிறது என்பதைக் காணமுடிகிறது. இவர்களது கூரை வீடு கழிகள் கட்டற்று வீழ்ந்து கிடக்கும் பழைய சுவர்.அச்சுவரில் காளான் பூத்துக் காணப்படும். இந்நிலையை,

"புனிற்றுறாய் குரைக்கும் புல்லென் அட்டில்

காழ்சோர் முதுசுவர்க் கணச்சி லரித்த

பூழி பூத்த பூழற்கா ளாம்பி"

என்கிறது (Mohan, 2007). இதன்மூலம் சங்ககாலத்தில் பாணர்களின் வாழ்க்கையில் வறுமை ஓங்கியிருந்தமையை அறியமுடிகிறது.

பாணர்கள் தம் வறுமை கருதி இரவலர்களை நாடி ஊர் விட்டு ஊர் செல்லும் குலத்தைச் சார்ந்தவராவர். இங்ஙனம் நடைப்பயணம் செல்வோர் காலில் காலணி அணியாமல் செல்லக் கூடிய

நிலையினர். வெப்பம் மிகுந்த மணற்பரப்பு வழியாக அவர்கள் நடந்து செல்லும் போது கூரிய பரற்கற்கள் கால்களைக் கிழித்து வருத்தும். இந்நிலையை,

“கதுப்பு விரித்தன்ன காழ்அக நுணங்கு அறல்

அயில்உருப் பனைய ஆகி ஐதுநடந்து

வெயில் உருப் புற்ற வெம்பரல் கிழிப்ப”

என்னும் அடிகள் பாணர்களின் ஏழ்மை நிலையைப் புலப்படுத்துகின்றன (Mohan, 2007). பாணர்களோடு வரும் விறலியர் வெகு தூரம் நடந்தமையால் வருந்திய அவர்களின் கால்களைக் கல்லா இளையர் வருடுவர். அனைவரும் கடம்ப மரத்தின் நிழலில் ஓய்வெடுத்துச் செல்வர்.

## ஆற்றுப்படுத்திய வழியில் பாணர்கள்

மன்னனைப் புகழ்ந்து பாடி பரிசில் பெற்று வரும் பாணர் குடும்பம் தனக்கு எதிரே வந்த பாணர்களிடம்,

“...........................நீயிரும்

இவண் நயந்து இருந்த இரும்பேர் ஒக்கல்

செம்மல் உள்ளமொடு செல்குவிர் ஆயின்”

என்றனர் (Mohan, 2007). இதன்மூலம் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதாகப் பாணர்கள் வாழ்ந்தனர். பரிசில் பெற்று வந்த பாணர்கள். ஆற்றுப்படுத்திய அவ்வழியில் பாணர்கள் செல்வர். செல்லும் வழியில் நெய்தல் வளமிக்க கடல் சார்ந்த ஊரில் வாழ்ந்த மக்கள் பாணர்களின் பசியை அறிந்து உணவளிப்பர். அதை அன்போடும் பண்போடும் பாணர்கள் விரும்பி உண்டனர் என்பதை,

“நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த

பழம்படு தேறல் பரதவர் மடுப்ப

வறற் குழற் சூட்டின் வயின் வயின் பெறுகுவிர்”

என்கிறது (Mohan, 2007). நெய்தல் நிலத்தைக் கடந்து முல்லை நிலத்தை அடைந்த போது அங்குள்ள மக்கள்.

“எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு

தேமா மேனிச் சில்வளை யாயமொடு

ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்”

என்று விருந்தோம்பினர் (Mohan, 2007). இந்நிலத்தைக் கடந்து மருதநிலத்தை அடைந்தனர் பாணர்கள். அப்பாணர் குடும்பத்திற்கு மருதநில மக்கள்,

“இருங்காழ் உலக்கை இரும்புமுகந் தேய்த்த

அவைப்புமாண் அரிசி அமலைவெண் சோறு

கவைத்தாள் அலவன் கலவையோடு பெறுகுவீர்”

என்று உபசரித்தனர் (Mohan, 2007). இதனை அன்போடு உண்டு மன்னனை நாடிச் செல்வர் பாணர்கள் என அறிய முடிந்தது,

## யாழ் இசைக்கும் பாணர்கள்

பாணர்களுக்கு மிகப்பெரிய சொத்து யாழ் ஆகும். இவ்யாழ் வார்க்கட்டால் கட்டப்பட்டது. அதில் பொருத்தப்பட்ட ஆணிகள் மணியை அடுக்கி வைத்தாற்போல் அழகாக இருந்தன. பாடப்படும் பாடலுக்கு இனிமை தரும் விதத்தில் இசைக்கப்படும் யாழினை வைத்து மன்னனைப்புகழ்ந்து ஆடிப்பாடி மகிழ்விக்கும் காட்சியை.

"முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்

இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்

ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்

தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்

நீ சில மொழியா அளவை" என்கிறது (Mohan, 2007).

## ஆற்றுப்படுத்திய பாணர்கள் பெற்ற பரிசில்

பாணர்களில் ஒரு பிரிவினர் மன்னனைப் புகழ்ந்து பாடி, ஆடி மகிழ்வித்து பரிசில் பெற்று வந்தனர். அத்தகையோருக்கு நல்லியக்கோடன் தந்த பரிசில்களாவது. பகை அரசர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற திறைப்பொருள். நல்ல உருளியால் ஆகிய தேர், வெள்ளை எருது, பாகனோடு ஊரும் யானை, குதிரை, அணிகலன்கள் ஆகியவைகளாகும். இங்ஙனம் பாணர்கள் தாம் பெற்ற பரிசில்களைப் பற்றி தமக்கு எதிரே வந்த பாணர்களிடம் கூறினர். அப்பாணர்கள் மன்னனைப் புகழ்ந்து இத்தகைய பரிசிலைப் பெறுவர் என்பதை.

"மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்

வாள்முகப் பாண்டில் வலவனொடு: தரீஇ.

அன்றே விடுக்கும் அவன் பரிசில்"

என்கிறது (Mohan, 2007).

## முடிவுரை

சங்க காலம் பொற்காலம் என்பர். ஆனால் பாணர் என்ற இனம் வறுமைக்கு ஆட்பட்டு இருந்தது. வளமிக்க பரந்துபட்ட நாட்டை ஆளும் மன்னன் ஏழ்மையில் வாடும் மக்களுக்கு நிரந்தரமாகப் பொருளாதாரத் தேவையை நிறைவேற்றக்கூடிய நிலையை உருவாக்கவில்லை. பாணர்கள் தாம் வாழும் காலம் வரை மன்னனை நாடி வரவேண்டியச் சூழலில் வாழ்ந்துள்ளனர். மன்னன் பாணர்களுக்கு எது தேவை என்பதை அறிந்து பரிசில் தரவேண்டும். பாணர்களுக்குக் குடியிருக்க ஒரு நல்ல இல்லம் இல்லை.அப்படியிருக்கையில் பாணர்களுக்கு யானை. குதிரை, தேர் கொடுத்தது தேவையில்லை. அவ்வினத்தாருக்கு உண்பதற்கு உணவில்லாதச் சூழலில் யானைக்கு எப்படி உணவு தர முடியும். இத்தகைய பரிசில் தருவதைத் தவிர்த்து ஒரு மனைகட்டித் தந்திருக்கலாம். அவர்கள் தம் உணவுக்குத் தேவையான பயிர்கள் விளைவிப்பதற்கு விளை நிலங்கள் கொடுத்திருக்கலாம். குளங்கள் உருவாக்கியிருக்கலாம். பாணர் குலம் செழித்திருக்கும். மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்கும்.

## References

Balusamy, N. (1992), Vazhviyal Kalanjiyam, Volume 12, Tamil University, Thanjavur, India.

Mohan, Ra. (2007) Perumpanatrupadai| Paathupattu, New Century Book House, Chennai, India.

Sivasubramanian, A., (2005) Inavaraiviyalum Tamil Novelum, Parisal Veeliyeedu, Chennai, India.

Stephen, G. (2004) Ilakkiya Inavaraiviyal, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License